


# தாயுமானவரின் ஆனந்தக் களிப்பும்

## வேதாத்திரி மகரிஷியின் பேரின்பக் களிப்பும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

ஆனந்தம் பிரம்மம் என்று சாதகன் ஞானத் தெளிவடைந்தான். ஆனந்தத்திலிருந்தே நிச்சயமாக உயிர்கள் தோன்றியுள்ளன.


பிறந்தவை எல்லாம் ஆனந்தத்திலேயே வாழ்ந்திருக்கின்றன. இறுதியில் ஆனந்தத்திலேயே லயமடைகின்றன.

ஆனந்தமே பரம்பொருள். அது யாருக்கும் தனி உரிமையாகாது . அண்டங்கள் அனைத்தும் ஆனந்தத்தில் தோன்றி ஆனந்தத்தில் நிலைத்திருந்து ஆனந்தத்திலேயே ஒடுங்குகின்றன.

ஆனந்தத்தை அறியாதார் யார்?

ஆனந்தமில்லாது யார் உயிர் வாழ்ந்திருக்க முடியும்?

ஆனந்தத்தில் ஒன்றுபட்டிருப்பவர் பரமனை அடைந்தவர் ஆகின்றனர்.




தாயுமானவர், தனது பாடல்களில் முதலில் யோகியாக இருந்து வருந்துகிறார்.

பின்பு சாதனை செய்து, வைராக்கியத்துடன் பாடுகிறார். பின்பு விவேகியாகிறார். இறுதியில் ஞானமடைந்து ஆனந்தக்களிப்பில் திளைக்கிறார்.

தன்னையே நொந்து உலகத்தை நோந்து புலம்பிய தாயுமானவர் இறுதியில் ஆனந்தக் களிப்பு என்ற பகுதியில் முப்பது பாடல்களில் 120 வரிகளில் தனது இறையின்பத்தைப் பாடுகிறார்.

மானுடம் எப்படிச் செல்ல வேண்டும்? என்று கூறி ஆனந்தத்தின் நிலையை இறுதியில் காட்டி மகிழ்கின்றார்.

வேதாத்திரி மகரிசியோ ஆனந்தத்திலேயே தொடங்கி ஆனந்தத்திலேயே முடிக்கிறார். சாதகனை மகிழ்ச்சியுடன் அழைத்துச் செல்கிறார்.



பேரின்பக் களிப்பு என்ற பகுதியில் பன்னிரண்டு பாடல்களை 48 வரிகளில் பாடியுள்ளார்.

ஆன்மீக ஞானம் முழுமையாக கைவரப் பெற்றிருந்த அருளாளர்கள் , இறைவனது அருளைப் பெற்ற பின்பு, பேரின்பம் அடைந்து பேரானந்தப் பெருநிலையில் இருந்து வாழ்ந்து காட்டினார்கள்.

மாணிக்கவாசகர், வள்ளலார், தாயுமானவர், வேதாத்திரி மகரிஷி போன்ற மகான்கள் பேரானந்த பெருநிலையில் இருந்து மானுடத்திற்கு வழி காட்டினார்கள். வாழ்ந்து காட்டினார்கள்.

இந்தப் பேரானந்தப் பெருநிலையை ---இராமலிங்க வள்ளலாரும் பற்பல இடங்களில் பாடுகிறார்.

வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் மயில் குயிலாச்சுதடி
துள்ளலைவிட்டுத் தொடங்கினேன் மன்றாடும் வள்ளலைக்கண்டேனடி
சாதி சமய சழக்கை விட்டேன் அருட்சோதியைக் கண்டேனடி
பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும் ஐயரைக் கண்டேனடி-

என்று ஆனந்தத்தின் உச்சியில் நின்று வள்ளலார் பாடுவார்.

ஆனந்த களிப்பு-- பேரின்ப களிப்பு–ஏன்- இந்த பெயர் வைத்தார்கள்?

கும்மிப் பாடல் போல- மும்மை நடையில் வந்தாலும், கும்மிப் பாடலின் ஒவ்வொரு அடியிலும் சேர்ந்திருக்கின்ற அசை நீட்டத்தைத்- தனிச்சொல்லுக்கு முன்பாக கொண்டு வருவது- களிப்பென்று சொல்லப்படும்.

இறையருள் பெற்றவர்கள், பெற்ற மகிழ்ச்சியினால் பாடும் பாட்டுக்கு- இப்பெயர் அமைந்ததாகக் கருதலாம்.

மாணிக்கவாசகர் "ஆனந்தம் பாடுதுங்கான் அம்மானாய்" ((திருவாசகம் . திருவம்மாணை 3) என்று பாடிய ஆனந்தம் என்ற வடசொல்- இப்பெயருக்கு முன்னோடியாக இருக்கலாம்.

அதோடு -களிப்பு என்ற தமிழ்சொல்லும் சேர்ந்து ஆனந்தக் களிப்பு என்ற தொடர் உருவாகியிருக்கலாம்.

அதைப்போலவே- களிப்பு என்ற தமிழ்சொல்லும் சேர்ந்து, பேரின்பக் களிப்பு என்ற தொடர் உருவாகியிருக்கலாம்.

**ஆனந்தக் களிப்புகள்- அமைப்பில் –நொண்டிச் சிந்துகளை பெரிதும் ஒத்துள்ளன; நடையால் மட்டுமே- வேறுபடுகின்றன.**

**நொண்டிச் சிந்துகள்- நான்மை நடையின. ஆனால் -ஆனந்த களிப்புகள் மும்மை நடையின.**

## களிப்பில் தொடங்கு - ஆனந்தத்தில் முடி

நமக்கு- வாழ்க்கையில் களிப்பு, மகிழ்ச்சி , ஆனந்தம்- ஆகிய மூன்றும் வேண்டும்.

களிப்பு என்பது- உடல் தொடர்பானது. மகிழ்ச்சி என்பது- மனம் சம்மந்தப்பட்டது. ஆனந்தம் என்பது -ஆன்மா தொடர்பானது.

களிப்பு என்பது மகிழ்ச்சி, **ஆனந்தம்,** பேரின்பம் சந்தோஷம், உல்லாசம், குசால் என்ற பொருள் தருகிறது.

ஆங்கிலத்தில் happiness – rejoicing - enjoymeny – gaiety – merriment என்று சொல்வார்கள்.

மகிழ்ச்சியே- மிகச் சிறந்த ஒழுக்கம் (happiness is the highest form of morality) என்று- இங்கர்சால் கூறுவது போல -நாம் மகிழ்ச்சியோடு இருக்கிறோமா என்பது முக்கியம்.

நேற்று இருந்ததைக் காட்டிலும்- இன்று அதிகம் மகிழ்ச்சியுடன் இருக்கிறோமென்றால்- நாம் வளர்ந்திருக்கிறோம் என்பது- பொருள்.

இன்றைக் காட்டிலும்- நாளை இன்னும் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்று நாம் திடமாக நம்பினால் அதுவே சிறந்த எதிர்பார்ப்பு.

மகிழ்ச்சி என்பது ஒரு மனநிலை. அது தனிமனிதனுக்கும் பொருந்தும். சமுதாயத்திற்கும் பொருந்தும்.

இன்றைய மகிழ்ச்சியும், நாளை மகிழ்ச்சியும் தொடர்புச் சங்கிலியால் பிணைந்தவை.

ஒரு நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும், மகிழ்ச்சியும் அதில் வாழ்பவர்களுடைய- மனநிலையின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றன.

நமக்கு- ஒருவர் ஒரு ஜாங்கிரி கொடுக்கிறார். மகிழ்ச்சியாகச் சாப்பிடுகிறோம். அதே ஜாங்கிரியை மற்றொருவர் சாப்பிட முடியாது. எனக்கு மட்டுமே பயன்படும் இது களிப்பு.

மார்கழி மாதததில் இசைக் கச்சேரிக்குச் செல்கிறோம். ஒருவர் பாடுகிறார். மெய்மறந்து- காதால் கேட்டு மனதால் இன்பமுறுகிறோம்.

இது- மனம் சம்மபந்தபட்ட மகிழ்வு. இதற்கும்- ஒரு எல்லை உண்டு. இது மகிழ்ச்சி.

எனக்கு- ஜாங்கிரி பிடிக்கும் என்பதால் 50, 60 ஜாங்கிரிகளைச் சாப்பிடச் சொன்னால்- என்ன வரும். எரிச்சல் வரும். சுவையும் இருக்காது.

அதுபோல்- பாட்டு நான்றாக இருக்கிறது என்று- மணிக்கணக்கில் கேட்டுக் கொண்டே- இருக்க முடியாது. அதற்கும்- சலிப்பு வரும்.

ஆனால்- ஆனந்தம் என்பது ஆன்மா சம்மந்தப்பட்டது. அதற்கு எல்லை இல்லை.

பிறருக்கு உதவும் போது, ஆனந்தம் உண்டாகிறது. மேலும் பலருக்கு உதவ உதவ ஆனந்தம் பெருகவே செய்யும்.

## ஆனந்தகளிப்பு பாடல்கள் அமைப்பு.

தமிழ்ப் பாடல்கள் அமைப்பை இரண்டாகப் பிரிப்பார்கள். அவை. 1. அகப்பாடல்கள். 2. புறப்பாடல்கள்.

புறப்பாடல்கள் என்பது பொதுவான நீதியைக் கூறுவது. கொடை, வீரம், தர்மம், நீதி, அரசனின் கடமை போன்றவற்றை கூறுவது.

களிப்பில் தொடங்கி- மகிழ்ச்சியில் துளிர்த்து- ஆனந்தத்தை நோக்கிச் செல்வதே உண்மையான வாழ்க்கைப் பயணம்.

அகம் என்றால்- உணர்வு என்பது பொருள். அச்சம், நாணம், மகிழ்ச்சி, போன்ற எட்டு விதமான உணர்வுகளை வெளிப்படுத்துவது அகப்பாடல்கள் அமைப்பு முறையாகும்.

அகப்பாடல்களை விதவிதமான அமைப்பில் பாடியிருக்கிறார்கள்.

சாதகர் இன்னொரு சாதகரிடம் சொல்வதாக பாடியிருக்கிறார்கள்.



இறைவனையே கணவனாக எண்ணிப் பாடியிருக்கிறார்கள். (ஆண்டாள் திருப்பாவை)

நண்பனிடம் தன் மகிழ்ச்சியை சொல்வது போல் பாடியிருக்கிறார்கள்.

இதுதான் அகப்பாடல்கள் அமைக்கும் இலக்கண வரையறையாகும்.

பொதுவாக நாம் நம்முடைய உணர்வுகளை தாய், தந்தை, சகோதரர்களை விட, நண்பர்களிடம்தான் அதிகம் பகிர்ந்து கொள்வோம்.

நல்ல நட்பு ஆரோக்கியத்தை தரும். நல்ல நட்பு மனவளர்ச்சிக்கு நல்ல தூண்டு கோலாக இருக்கும். நல்ல நட்பு நமது உணர்ச்சிகளுக்கு வடிகாலாக அமையும்.

ஆண் நண்பன் என்றால் தோழன். பெண் நண்பி என்றால் தோழி.



ஒரு பெண் தன் தோழியிடம், தன் உணர்வுகளை கூறுவதாக, தாயுமானவர் தன் ஆனந்தத்தை வெளிப்படுத்துகிறார்.

ஆனந்தக் களிப்பு, பல்லவியும் சரணங்களும் மட்டும் பெற்றுவரும் கீர்த்தனையின் சாயல் காட்டி அமையும்.

இதன்கண் பல்லவி போன்றுவரும் பகுதி முந்நாற்சிரொற்றையாகும்.

இப்பகுதி தொடர்ந்து வரும் சிந்துகட்குப் பின் மீண்டும் மீண்டும் பாடப்படல் எதிர் பார்க்கப்படுகின்றது.

முப்பது சிந்துக்களும் முந்நாற்சீரொற்றையாகும். ஓசை நயமிக்க இச் சிந்துப் பாடல்கள் உணர்வு வெளியீட்டிற்கு ஏற்ற களனாகின்றன.



பிச்சைக்காரர்கள் முதல் பேராசிரியர் வரைப் பாடி இன்புற்று ஆழங்கண்டு அனுபவிக்கும் தகுதி வாய்ந்தன தாயுமானவர் பாடல்கள்.

தாயுமானவரின் பாடலின் தாக்கமே, டாக்டர் மு.வ. அவர்களின் "மண்குடிசை" என்ற புதினம். அதன்கண் பல இடங்களிலும் தாயுமானவர் கருத்துக்களையும் பாடல்களையும் அவ்வாறே எடுத்தாண்டுள்ளார்.

## வேதாத்திரி மகரிசியின் பேரின்பக் களிப்பு

**பேரின்பம் என்றால் என்ன?** விடையாக வருகிறார் மகரிசி

- "பேரின்பம் என்பது அறிவின் உயர்நிலை,
- பேரின்பம் என்பது அறிவின் முதிர்ச்சி,
- பேரின்பம் என்பது அறிவின் முதுமை,
- பேரின்பம் என்பது அறிவின் ஞானஒளி,

பேரின்பம் என்பது, மனித குலத்தில் நாம் வாழ்கின்ற அனைவருக்கும், எட்டாகனியாகவே நினைத்திருந்த அந்த ஞானக் கனியைப் பாமரமக்களும் சுவைத்து. இன்புற்று,,,,,,

பேரின்ப பெறுவாழ்வு பெறவதற்கு ஏற்ற இறைநிலை உணர்வை, நமது உயிராற்றல் மூலமாகவே மேலே ஏற்றி, உயிர் உணர்வு பெறச் செய்து,,,,

அதன் மூலமாகவே இறைநிலை உணர்வு பெறச் செய்து.....

அதன் மூலமாக அமைதி உள்ள ஓர் நிலையை அடைந்து......

அந்த அமைதி நிலையிலேயே, அயரா விழிப்பு நிலையில் நின்று..

இல்லறத்தை நல்லறமாக மாற்றி அறநெறியில் வாழ்கின்ற பொழுது, பேரின்ப நிலை கிட்டுகிறது.

## நிலையான பேரின்பம் எது?

மண் என்ற நிலம் மீது பெண் துணைகொண்டு பொருளை கொண்டு வாழ்க்கை வாழ்ந்து வரும் மனிதனாவன், அந்த பொருள்களிலிருந்து பெறுகின்ற அனுபோகமே இன்பம் என்றும்...

அதுவே பொருள் என்ற மயக்கநிலையில் மதி மயங்கி வாழும் மனிதனின் அறிவு நிலையை உயர்த்தி மெய்ப்பொருள் ஒன்றே உண்மைப் பொருள்.

இப்பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து தோற்றங்களும் நிகழ்ச்சியே என்ற அயரா விழிப்பு நிலையில் தாமரை இலை தண்ணீர்போல,,,,

உறவிலே கண்ட உண்மைநிலை தெளிவே துறவு என்ற நிலையில் காணும்பொழுது.....

மெய்ப்பொருள் நிலை மறவாது மூன்று தோற்றங்களிலிருந்து அனுபோகமாக எவன் ஒருவன் இன்பத்தை பெறுகின்றானோ....

அதுவே அவனது நிலைத்த, நீடித்த மகிழ்ச்சியான, நிலையான இன்பமாகிய பேரின்பம் ஆகும்.

## தாயுமானவர் யார்?

18-ம் நூற்றாண்டில் வாழ்ந்து, இறையனுபவத்தில் ஈடுபட்டு, “பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற பரிபூரணானந்தமே” என்று ஞானநிலையை அடைந்தவர் தாயுமானவர்.

திருச்சி மலைக்கோட்டையில் எழுந்தருளியுள்ள தாயுமானவரை வணங்கி, மகப்பேறு வாய்த்ததால், அவருடைய பெற்றோர் அவருக்குத் தாயுமானவர் என்றே பெயர் சூட்டினர்.




கல்வி கேள்விகளில் சிறந்து, சாஸ்திரங்களில் தேர்ச்சி பெற்று, சைவ ஆகமங்களையும் கசடறக் கற்றார் தாயுமானவர்.

திருமூலர் மரபில் வந்த குரு ஒருவரால் ஆட்கொள்ளப்பட்டு, “சும்மா இரு” என்ற உபதேசத்தைப் பெற்றார் தாயுமானவர்.

இந்த உபதேச மொழிதான், அவருடைய பாடல்களுக்கு அடிப்படையாக அமைந்தது.

சூழ்நிலை காரணமாக நாயக்கர் ஆட்சியில், ராஜப் பிரதிநிதியாகப் பொறுப்பு வகித்தாலும், அவர் மனது பக்தி மார்க்கத்தில் மூழ்கி இருந்தது.

எனவே, துறவு பூண்டு, தல யாத்திரை சென்றார். பரிபூரணானந்தம், மௌன குரு வணக்கம், சுகவாரி, தேஜோமயானந்தம், பராபரக்கண்ணி, ஆனந்தக் களிப்பு என்று 56 தலைப்புகளில் 41267வரிகளில் 1452 பாடல்களை இயற்றினார்.

பரிபூராணானந்தம் என்ற தலைப்பில் தாயுமானவர் பத்துப் பாடல்களை பாடியுள்ளார்."

"பார்க்குமிடம் எங்கும் ஒரு நிக்கமற நிறைகின்ற

பரிபூண ஆனந்தமே"

ஆனந்தமான பரம் என்ற தலைப்பில், பரம்பொருள் ஆனந்தமே என்று பத்துப் பாடல்கள் பாடியுள்ளார்.

"அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவாகி

ஆனந்தமான பரமே"

சச்திதானந்தம் என்பது சத்து + சித்து = ஆனந்தம் ஆகும். சத்து - இயற்கை உண்மையாயிற்று–இயற்கை விளக்கமாயிற்று. ஆனந்தம் - இயற்கை இன்பமாயிற்று..

"அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்தத் தேனே!" – என்பது வள்ளலார் வாக்கு.

## ஆனந்தக் களிப்பு பாடிய தாயுமானவர்

பேரின்பத்தில் திளைத்து, இறைவனை அறிந்து அவனுடன் இரண்டறக் கலக்கும் ஞான அனுபவத்தைப் பெரு மகிழ்ச்சியுடன் சொல்வதே ஆனந்தக் களிப்பு'.



தாயுமானவர், வேதாத்திரி மகரிசி ஆகிய இருவருமே 'ஆனந்தக் களிப்பு' "பேரின்ப களிப்பு" என்ற தலைப்புகளில் தங்கள் இறையனுபவத்தை

வெளிப்படுத்தி, பாடல்களை இயற்றியுள்ளனர்.

தாயுமானவர் தமது 'சங்கர சங்கர சம்பு சிவ, சங்கர சங்கர சங்கர சம்பு' என்று துவங்கும் ஆனந்தக் களிப்பில்,

*ஆதி அநாதியும் ஆகி எனக்கு*

*ஆனந்தமாய் அறிவாய் நின்று இலங்கும்*

*ஜோதி மவுனியாய்த் தோன்றி அவன்*

*சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி! - சங்கர*

என்று தான் அறிந்த ஜோதிமய ஆனந்த நிலையையும், அதற்குக் காரணமான மௌன குருவின் பெருமையையும் ஒருசேரக் கூறுகிறார்.

*என்னையும் தன்னையும் வேறா உள்ளத்து*

*எண்ணாத வண்ணம் இரண்டு அற நிற்கச்*

*சொன்னது மோஒரு சொல்லே அந்தச்*

*சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன் சங்கர*

என்று இறைவனுடன் இரண்டறக் கலந்த பெருநிலையை விவரிக்கிறார் தாயுமானவர்.

வேதாத்திரி மகரிசியோ "அதுவே நானாகவும் இருப்பதை.....இரண்டறக் கலந்த பெருநிலையை" தனக்கே உரிய பாணியில் விவரிக்கிறார்.

."நான்யார்?" என்றே வினவ நல்லுடலும், உயிர், அறிவு
நல்லிணைப்பாய்க் கூடியொரு நாட்டமுடனே ஒலிக்கும்.
ஊன்உடலே வாகனமாம். உள்ளியங்கும் ஆற்றல் உயிர்.
வான்கடந்த மெய்ப்பொருளே வாலறிவாம்! அதுவேநான்! (ஞாக.பா.1647-9)

நான் யார்? என்ற கேள்வி என்னுள் எழுந்தபோது பரு உடல், உயிர், அறிவு ஆகிய மூன்றும் இணைந்து ஒரு விருப்பத்துடன் விளங்கியது.

கண்களால் காண்கின்ற பரு உடல் ஒரு வாகனமாகவும்,
வாகனத்தை இயக்கும் சக்தி உயிராகவும்,,,,,
விண் என்ற ஆகாசத்தைக் கடந்தும் இருக்கின்ற உண்மைப்பொருளே தூய்மையான அறிவாகவும்,,,,
அதுவே நானாகவும் இருப்பதை உணர்ந்தேன்---என்கிறார் பேரின்ப களிப்பில் வேதாத்திரியார்.

## தற்பரத்தை உணர்ந்த உணர்வாளர்கள்

“ஆடுவதும் பாடுவதும் ஆன்ந்தமாக நினைத்

தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே”

என்று வெட்ட வெளியை நினைத்து என்றென்றும்பாடினேன் ஆடினேன் நாடிநாடி விரும்பியே கூவினேன் உளறினேன் அலறினேன் மெய்சிலிர்த்து இருகை கூப்பி விண்மாரி என என் இரு மெய்யன்பே என்று சற்று அயர்ந்தேன் என்று ஆனந்தக் களிப்பில் முழுகியவர் தாயுமானவர்.

எங்கெங்கும். என்னுள்ளும், எல்லாத் தோற்றங் களிலும்,
இடையற்ற மறைபொருளாய் இருந்து, பேரண்ட மெங்கும்
தங்கித் தழைத்தே இயங்கும் தற்பரத்தை யானுணர்ந்தேன்,
தனித்து மனத்துள் நிலைத்துத் தவமாற்றும் சாதனையால். (ஞாக.பா.1647-8)




எனக்குள்ளாகவும், எல்லாத் தோற்றங்களிலும் இடைவெளி இல்லாமல், மறைபொருளாக இருந்து, பேரியக்க மண்டலம் முழுவதிலும் தங்கி இருந்து, விரிவடைந்து, இறைநிலையானது இயங்குகிறது.

தனித்திருந்து, மனதை உயிரில் ஒடுக்கி அடக்கி, நிலைத்து, தவம் இயற்றும் சாதனையின் மூலமாக எனக்குள்ளாகவே எல்லாவற்றையும், எல்லாவற்றிலும் என்னையும் உணர்ந்தேன்.

தானே பரம் ஆன நிலை தற்பரம் என்பதை உணர்ந்தேன் என வெட்டவெளியை நினைத்து பேரின்பக் களிப்பில் முழுகியவர் வேதாத்திரி மகரிசி.

## சிவானந்தம் விளையும் பூமி

சிவானந்தம் விளையும் பூமியாகிய அந்த வெட்டவெளியை அடைந்து, கொடிய இருளாகிய ஆணவமலம் நீங்கப் பெற்று, பிறகு பார்த்தேன்.

அப்பொழுது எம் தலைவின் அழகைத் தவிர வேறொன்றும் கண்டிலேன் என்கிறார் தாயுமானவர் ஆனந்தக்களிப்பில்

"விளையும் சிவானந்த பூமி-அந்த
வெட்ட வெளிநண்ணித் துஷ்ட இருள்ஆம்
களையைக் களைந்து பின் பார்த்தேன்-ஐயன்
களைஅன்றி வேறுஒன்றும் கண்டிலன் தோழி-" -(ஆ.க.பா. 15)

மகரிசியோ.......... "இறைநிலையே தன் நிலையில் மாற்றம் பெற்று சடப்பொருட்களாகி, சீவன்களாகி, எல்லாவற்றிலும் இருந்து. இயக்கிக் காத்து, முடித்தும் வைக்கின்ற கருணையை உணர்ந்து கொண்டேன் என்று பேரின்பக் களிப்பில் பாடுகிறார்.

"உயிர்கள்தமை வெளியிட்டு, உயிர்க்குயிராய் உள்நிறைந்து,
உணர்வாயும் அறிவாயும் உலகில் பல்லுயிர் வாழப்
பயிர்வகைகளாய் நிறைந்து பரங்கருணை யானுணர்ந்தேன்.
பல்லுயிரும்இன்பமுறப் பலவளங்களாய் நிறைந்தான்!" ((ஞா.க.பா.1647 -6)

## மிகச்சிறிய மனிதவுரு வாழுகின்றேன்

பிறப்பு என்பது,,,,,,,,,,,,,,, வேண்டாத விருப்பு வெறுப்பு என்னும் வில்லங்கத்தால் விளைவது என்கிறார் தாயமானவர்.

"வேண்டா விருப்பும் வெறுப்பும் - அந்த
வில்லங்கத் தாலே விளையும் ஜனனம்" -(ஆ.க.பா. 24)

மகரிசியோ..

மண்ணான இவ்வரிய மாபெரிய உலகமிசை
மனமுடைய மிகச்சிறிய மனிதவுரு வாழுகின்றேன்!
எண்ணரிய ஆயிரங்கள் எண்ணங்கள் என்னுளத்தே
எழுகின்ற விந்தையினை யார் அறிவார்? யார் அறிவார்.

இந்தப் பெரிய நில உலகத்தில் எண்ணிலடங்காத சீவ இனங்களிலே, மிகச் சிறிய மனித உருவம் கொண்டு வாழ்கிறேன். எண்ணிக்கைக்கு அப்பாலாக ஆயிரமாயிரரம் எண்ணங்கள் என் மனதில் தோன்றும் வியப்பை என்னைத்தவிர வேறு யார் அறியமுடியும் எனக் கேட்கிறார்.

## அறிவாய் நின்ற இறைநிலையின் பேரறிவு

தொடக்கமும் முடிவும் ஆகி, எனக்குப் பேரின்பமாய், அறிவாய், நின்று விளங்கும் பேரொளி மௌனியாய்த் தோன்றி, அவன் பிறர் சொல்லாத பார்தைச் சொன்னான் என்கிறார் தாயுமானவர்.

"ஆதி அநாதியும் ஆகி - எனக்கு

ஆனந்தமாய் அறிவாய்நின்று இலங்கும்…"(ஆ.க.பா.1)

அறிவாய் நின்ற இறைவன்.......

விந்து நாதக் கலப்பால் எனது உடல் செல்களாலும் சிற்றறைகளாலும் இணைக்கப்பட்டு....

ஒன்றுடன் ஒன்று இணைந்து, சிந்தனைக்கு எட்டாத செயலல்களை எல்லாம் சிறப்பாக நடந்து கொண்டிருப்பது......

**இறைநிலையின் பேரறிவாலேயாகும்** என்பார் வேதாத்திரி, தனது பேரின்பக் களிப்பில்.:.

சின்னஞ்சிறு சிறுசெல்கள் சேர்ந்திணைந்து ஒத்துழைத்து,
சிந்தனைக்கு எட்டாச்செயல்கள் சிறப்புடலில் நிகழ்த்துவன.
முன்னம் ஒருதுளியான மூலவிந்து நாதத்தால்,

முழுமையாய் எனதுஉடல் முற்றறிவன் திருவருளால் (ஞா.க.பா.1647.12)

## இறைவனது அருள்வடிவே மெய்

ஒருசிலர் கடவுள் இருக்கிறார்? இல்லையா, என்று கேள்வி எழுப்பி வாதப் பிரதிவாதங்கள் செய்கிறார்கள்.

மனிதருக்கு விலங்கினங்களுக்கு இல்லாத சிறப்பான ஆறாவது அறிவு உள்ளது.

ஐயுணர்வை அறிவின் கட்டுக்குள் கொண்டு வருவதற்கும், ஞானம் பெறவும் விந்தையான உடலையும் கொடுத்துள்ள இறைநிலை, துணியில் ஊடும் பாவுமாக உள்ள நூல் போல எல்லாவற்றிலும் பின்னிப் பிணைந்தே உள்ளது

நல்லஉயர் சிந்தனைக்கும், ஞானம் பெற ஐயுணர்வை
வெல்லவும் நல் ஆறறிவாய் வித்தை உடல் தந்த இறை,
இல்லையா? உண்டா? என்று எழுகின்ற வாதங்களில்,
இழை துணியில் பாவாய் நூலாய் இருப்பதுபோல் பின்னியுள்ளான்.
(ஞா.க.பா.1647 -7)

இறைவனது அருள்வடிவை மெய் என்று கொள்ள வேண்டாமோ? எனக் கேட்கிறார் தாயுமானவர்.

சொல்லிஎன் ஐயன்-என்னைத்
தான் ஆக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி-(ஆ.க.பா.8)

## வந்த வரவை மறக்கலாமா?

வந்த நோக்கத்தை மறந்து, மிகுந்த மயக்கம் செய்யும் பெண், பொன், மண் ஆகிய இவற்றின்மீது ஆசை வைக்கும் அறியாமையை அறுக்க,,,,,

எனக்கு எம் தந்தை மெய்ஞ்ஞானம் என்னும் அழகிய வாளினைக் கொடுத்தான் என்கிறார் தாயுமானவர்.

வந்த வரவை மறந்து-மிக்க
  மாதர்பொன் பூமி மயக்கத்தில் ஆழும்
இந்தம யக்கை அறுக்க-எனக்கு
  எந்தை மெய்ஞ்ஞான எழில்வாள் கொடுத்தான்- (ஆ.க.பா.26)

உடலைப் பேணிப் பாதுகாப்பதற்கு உலகியல் பொருட்கள் தேவை. ஆன்மா, மேன்மையும் தூய்மையும் பெற உயிருக்கு மெய்ப்பொருள் உணர்வு தேவை.



அறிவு உயர்விற்கு உயர்வான கலைகள் தேவை. இனிமையாக வாழ்வதற்கு ஒழுக்க நெறி தேவை.

இவைகள் எல்லாம் “நாம் நலமாக வாழத் தேவை என்பதை உணர்ந்து, நாடுகள் அனைத்திலும் நல்லறிவால் ஊடுருவி தொண்டாற்றி இயற்கை நியதிப்படி வாழ்கின்றேன் என்கிறார் வேதாத்திரி மகரிசி பேரின்ப களிப்பில்.

“உலகப்பொருள் உடலுக்கும், உண்மைப் பொருள் உயிருக்கும்,
உயர்கலைகள் அறிவிற்கும், ஒழுக்கநெறி வாழ்வதற்கும்,
நலமளித்தல் நானுணர்ந்தேன், நடுநின்று வாழுகின்றேன்!
நாடனைத்தும் ஊடுருவி, நல்லறிவின் தொண்டாற்றி” (ஞா.க.பா.1647 -11)



## பெண்ணின் பெருமையை வியந்த மகரிசி

பேரின்பக் களிப்பில் வேதாத்திரி மகரிசி இன்பத்தின் உச்சியில் சென்று, பெண்ணின் பெருமையை வியந்து பாராட்டி மகிழ்கின்றார்.

தாயுமானவரோ ஆனந்தக் களிப்பில் பெண்களை பற்றி எதுவும் சொல்லவில்லை.

"சூட்சுமமாய்க் குறுகி நின்று தொடங்கியது தன் வளர்ச்சி
சொல்லரிய மறைபொருளாய்த் தொடந்து வரும் வினைக்கேற்ப
ஆட்சியின்றி ஆளுகின்ற ஐயன் திருவருளால்
அன்னை கருப்பை விடுத்து அடைந்துவிட்டேன் மண்ணுலகை"

பனித்துளிகளை விட மிகச்சிறிய அளவில் உருவாகிய நான், தொடர்ந்து வந்து கொண்டுள்ள இறைநிலையின் பேரறிவால் வளர்ச்சி பெற்று,,,,,

அரசாங்கம் என்பது இல்லாமலே எல்லாவற்றிலும் ஆட்சிசெய்து கொண்டுள்ள இறைநிலையின் அருளால்,,,,,

எனது முன்வினைப் பதிவுகளுக்கேற்ப, அன்னையின் கருப்பையை விட்டு வெளியேறி நில உலகத்திற்கு வந்து சேர்ந்தேன் எனப் பாடுகிறார் மகரிசி.

"எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திரு உள்ளமென்ன?

எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழ்ந்து வரும் மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனைப் பேர்?"

பேராற்றலையும், பேரறிவையும் உடைய இறைநிலையானது எந்த உயிரும் உருவாகி, முழுமைபெற்று, நில உலகம் வந்து சேர்வதற்கு உகந்த வழியை உடைய பெண்களை,,,,
வல்லமையான வகையில் வடிவமைத்துள்ளதன் பயனை வாழ்ந்து கொண்டுள்ள மக்களில் எத்தனை பேர் அறிந்துள்ளனர்?

பெண்ணினத்தை அவமதித்துப் பெருமைபெற நினைந்தவர்கள்
பெரும்பாவச் சுமையேற்றுப் பெற்ற துன்பம் உலகறியும்
எண்ணி, எண்ணிப் பெண் பெருமை ஏற்றிப் புகழ்ந்தே எழுதி
இன்பமுற்றார் இவ்வுலகில் இறைவனைப்போல் என்றுமுன்ளார்.

சிருஷ்டித் தொழிலில் இறைநிலைக்கு அடுத்தபடியாக உள்ள பெண்களின் பெருமை தெரியாமல் அவமதித்துப் பெருமையடைய நினைத்தவர்கள்,,,,
பலவகைத் துன்பங்களை அனுபவித்ததை உலகம் அறியும். ஆனால் பெண்களின் சிறப்பை உணர்ந்து பெருமை பெறச் செய்தவர்கள் இன்பமாக வாழ்ந்தனர். இன்றுவரை மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டுமுள்ளனர்.

## வையமெல்லாம் வாழட்டும்

ஆனந்தக் களிப்பு என்ற பகுதியில் தாயுமானவர் அகவலில் முப்பது பாடல்கள் பாடியுள்ளார்.

"ஆசா பிசாசைத் துரத்தி-ஐயன்

அடியினைக் கீழே அடக்கிக் கொண்டாண்டி" (ஆன.4)

“உடலும் புளகிதம் ஆக எனது

உள்ளம் உருக உபாயம் செய் தாண்டி” (ஆன.7)

“தன்பாதம் சென்னியில்; வைத்தான் என்னைத்

தான் அறிந்தேன் மனம் தான் இறந்தேனே” (ஆன.10)

ஒவ்வொரு நாளையும் இறைநிலையின் அன்பின் ஊற்றுப் பெருக்க நன்னாளாகவே கருதிக் கொண்டாடி மகிழ்ந்தவர் மகரிசி.

வையமெல்லாம் வாழட்டும் வாழ்க்கைவளம் காத்தினிதாய்!
வளரட்டும் மெய்யறிவு வாழ்க்கை இன்பம் துய்தலிலே!
உய்ய மெய்ப்பொருள் நாட்டம், உலகெங்கும் மக்களிடம்
ஓங்குக மேலோங்குக நம் உள்ளங்கள் ஒன்றுபட! (ஞா.க.பா.1627 -12)

“ஆறறிவாய் வாழ் மனிதர் அதற்கு ஏற்ப பொருத்தமுள
பேறு உண்மைப் பொருளுணர்தல் பிறவிப் பயனைப் பெற்றுவிட்டேன்”
(ஞா.க.பா.1626)

பேரின்பக் களிப்பில் திளைத்த மகரிசி, “இறைவனைக் கண்டு கொண்டேன் இறைவனைக் கண்டு கொண்டேன்” என்று ஆனந்தக் களிப்பில் மகிழ்ந்து மானுடத்தையும் மகிழ வைக்கிறார்.

## ஆனந்தக் களிப்பின் இறுதி இலக்கு

மெய்ஞ்ஞானத்தின் அடிப்படை ‘தன்னையறிதல்’. தன்னையறியும் முயற்சியில் ஈடுபடுபவர் தான் பேரின்பத்தின் இறுதி இலக்கான இறைவனை அடைய முடியும்.



அந்த நிகழ்முறையில், இவ்வுலக ஆசைகளை விட்டொழித்து, நிலையாமையை உணர்ந்து, இறை வழிபாட்டில் தன்னைக் கரைத்துக் கொள்வதே ஞானநெறியாகும்.

இருவருமே ஞானநெறியில் ஈடுபட்டு, ஆனந்தக் கடலில், பேரின்ப ஊற்றில் அடைந்தனர்.

"ஆனந்தக் களிப்பில் " தாயுமானவரும், "பேரின்பக் களிப்பில் " வேதாத்திரி மகரிசியும் சொல்லியதை உணர்ந்து உள்வாங்கி ஆனந்தமாக வாழ்வோமாக.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே!!!!

பிற்சேர்க்கை

## தாயுமானவரின் ஆனந்தகளிப்பு பாடல்கள்

"சங்கர சங்கர சம்பு - சிவ,

சங்கர சங்கர சங்கர சம்பு

1. "ஆதி அநாதியும் ஆகி - எனக்கு

ஆனந்த மாய்அறி வாய்நின்று இலங்கும்

ஜோதி மவுனியாய்த் தோன்றி - அவன்

சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி.

1. “சொன்னசொல் ஏதுஎன்று சொல்வேன் - என்னைச்
   சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி
முன்னிலை ஏதும்இல் லாதே சுகம்
   முற்றச்செய் தேன்எனைப் பற்றிக்கொண் டாண்டி.

2. பற்றிய பற்றுஅற உள்ளே - தன்னைப்
   பற்றச்சொன் னான்பற்றிப் பார்த்த இடத்தே
பெற்றதை ஏதுஎன்று சொல்வேன் - சற்றும்
   பேசாத காரியம் பேசினான் தோழி

3. பேசா இடும்பைகள் பேசிச் சுத்தப்
   பேய்அங்கம் ஆகிப் பிதற்றித் திரிந்தேன்
ஆசா பிசாசைத் துரத்தி-ஐயன்
   அடியினைக் கீழே அடக்கிக்கொண் டாண்டி-சங்கர

5.அடக்கிப் புலனைப் பிரித்தே-அவன்
   ஆகிய மேனியில் அன்பை வளர்த்தேன்
மடக்கிக்கொண் டான்என்னைத் தன்னுள்-சற்றும்
   வாய்பேசா வண்ணம் மரபும்செய் தாண்டி -

6.மரபைக் கெடுத்தனன் கெட்டேன்-இத்தை
   வாய்விட்டுச் சொல்லிடின் வாழ்வு எனக்கு இல்லை
கரவு புருஷனும் அல்லன்-என்னைக்
   காக்கும் தலைமைக் கடவுள்காண் மின்னே -

7.கடலின் மடைவிண்டது என்ன-இரு
   கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய

உடலும் புளகிதம் ஆக-எனது
உள்ளம் உருக உபாயம்செய் தாண்டி -

8.உள்ளதும் இல்லது மாய்முன்-உற்ற
உணர்வது வாய்உன் உளம்கண்டது எல்லாம்
தள்ளனச் சொல்லின்என் ஐயன்-என்னைத்
தான் ஆக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி-

9.பார்ஆதி புதம்நீ அல்லை-உன்னிப்
பார்இந் திரியம் கரணம்நீ அல்லை
ஆராய் உணர்வுநீ என்றான்-ஐயன்
அன்பாய் உரைத்தசொல் ஆனந்தம் தோழி-

10.அன்பருக்கு அன்புஆன மெய்யன்-ஐயன்
ஆனந்த மோனன் அருள்குரு நாதன்
தன்பாதம் சென்னியில் வைத்தான் என்னைத்
தான்அறிந் தேன்மனம் தான்இறந் தேனே-

11.இறப்பும் பிறப்பும் பொருந்த-எனக்கு
எவ்வணம் வந்ததுஎன்று எண்ணயான் பார்க்கில்
மறப்பும் நினைப்புமாய் நின்ற-வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி -

12.மனதேகல் லால்எனக்கு அன்றோ-தெய்
மவுன குருஆகி வந்துகை காட்டி
எனதுஆம் பணிஅற மாற்றி-அவன்
இன்னருள் வெள்ளத்து இருத்திவைத் தாண்டி-

13.அருளால் எவையும்பார் என்றான்-அத்தை
அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்

இருள்ஆன பொருள்கண்டது அல்லால்-கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி-

14.என்னையும் தன்னையும் வேறா-உள்ளத்து
எண்ணாத வண்ணம் இரண்டுஅற நிற்கச்
சொன்னது மோஒரு சொல்லே-அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தைஎன் சொல்வேன்-

15.விளையும் சிவானந்த பூமி-அந்த
வெட்ட வெளிநண்ணித் துஷ்ட இருள்ஆம்
களையைக் களைந்து பின் பார்த்தேன்-ஐயன்
களைஅன்றி வேறுஒன்றும் கண்டிலன் தோழி-

16.கண்டார் நகைப்புஉயிர் வாழ்க்கை-இரு
கண்காண நீங்கவும் கண்டோம் துயில்தான்
கொண்டார்போல் போனாலும் போகும்-இதில்
குணம்ஏது நலம்ஏது கூறாய்நீ தோழி-

17.நலம்ஏதும் அறியாத என்னைச்-சுத்த
நாதாந்த மோனம்ஆம் நாட்டம்தம் தேசம்
சலம்ஏதும் இல்லாமல் எல்லாம்-வல்லான்
தாளால்என் தலைமீது தாக்கினான் தோழி-

18.தாக்கும்நல் ஆனந்த ஜோதி-அணு
தன்னில் சிறிய எனைத்தன் அருளால்
போக்கு வரவுஅற்று இருக்கும்-சுத்த
பூரணம் ஆக்கினான் புதுமைகாண் மின்னே-

19.ஆக்கி அளித்துத் துடைக்கும்-தொழில்
அத்தனை வைத்தும்என் அத்தனை யேனும்

தாக்குஅற நிற்கும் சமர்த்தன்-உள்ள
சாட்சியைச் சிந்திக்கத் தக்கது தோழி -

20.சிந்தைதைப் பிறந்ததும் ஆங்கே-அந்தச்
சிந்தை இறந்து தெளிந்ததும் ஆங்கே
எந்த நிலைகளும் ஆங்கே-கண்ட
யான்தான் இரண்டுஅற்று இருந்ததும் ஆங்கே-

21.ஆங்குஎன்றும் ஈங்குஎன்றும் உண்டோ-சச்சி
தானந்த ஜோதி அகண்ட வடிவாய்
ஓங்கி நிறைந்து கண்டால்-பின்னர்
ஒன்றுஎன்று இரண்டுஎன்று உரைத்திடல் ஆமோ-

22.என்றும் அழியும்இக் காயம்-இத்தை
ஏதுக்கு மெய்என்று இருந்தீர் உலகீர்
ஒன்றும் அறியாத நீரோ-யமன்
ஒலைவந் தால்சொல்ல உத்தரம் உண்டோ-

23.உண்டோ நமைப்போல வஞ்சர்-மலம்
ஊறித் ததும்பும் உடலைமெய் என்று
கொண்டோ பிழைப்பதுஇங்கு ஐயோ-அருள்
கோலத்தை மெய்என்று கொள்ளவேண் டாவோ-

24.வேண்டா விருப்பும் வெறுப்பும்-அந்த
வில்லங்கத் தாலே விளையும் ஜனனம்
ஆண்டான் உரைத்த படியே-சற்றும்
அசையாது இருந்துகொள் அறிவுஆகி நெஞ்சே-

25.அறிவாரும் இல்லையோ ஐயோ-என்னை
யார்என்று அறியாத அங்கதே சத்தில்

வறிதே காமத்தீவில் சிக்கி-உள்ள
  வான்பொருள் தோற்கவோ வந்தேன்நான் தோழி-

26.வந்த வரவை மறந்து-மிக்க
  மாதர்பொன் பூமி மயக்கத்தில் ஆழும்
இந்தம யக்கை அறுக்க-எனக்கு
  எந்தை மெய்ஞ்ஞான எழில்வாள் கொடுத்தான்-

27.வாள்ஆரும் கண்ணியர் மோகம்-யம
  வாதைக் கனலை வளர்க்கும்மெய் என்றே
வேளான் அவனும்மெய் விட்டான்-என்னில்
  மிக்கோர் துறக்கை விதிஅன்றோ தோழி-

28.விதிக்கும் பிரபஞ்சம் எல்லாம்-சுத்த
  வெயில் மஞ்சள்ளன்னவே வேதாக மங்கள்
மதிக்கும் அதனை மதியார்-அவர்
  மார்க்கம்துன் மார்க்கம்சன் மார்க்கமோ மானே-

29.துன்மார்க்க மாதர் மயக்கம்-மனத்
  துயர்க்குப் பற்றாது சொன்னேன் ஜனகன்
தன்மார்க்க நீதிதிஷ் டாந்தம்-அவன்
  தான்அந்தம் ஆன சதானந்தன் அன்றோ-

30.அன்றுஎன்றும் ஆம்என்றும் உண்டோ-உனக்கு
  ஆனந்தம் வேண்டின் அறிவுஆகிச் சற்றே
நின்றால் தெரியும் எனவே-மறை
  நீதிஎம் ஆதி நிகழ்த்தினான் தோழி-
சங்கர சங்கர சம்பு-சிவ, சங்கர சங்கர சங்கர சம்பு.

## வேதாத்திரி மகரிசியின் பேரின்பக்களிப்பு

1."மண்ணான இவ்வரிய மாபெரிய உலகமிசை
மனமுடைய மிகச்சிறிய மனிதவுரு வாழுகின்றேன்!
எண்ணரிய ஆயிரங்கள் எண்ணங்கள் என்னுளத்தே
எழுகின்ற விந்தையினை யார் அறிவார்? யார் அறிவார். (ஞா.க.பா.1647.1)

2. சின்னஞ்சிறு சிறுசெல்கள் சேர்ந்திணைந்து ஒத்துழைத்து,
சிந்தனைக்கு எட்டாச்செயல்கள் சிறப்புடலில் நிகழ்த்துவன.
முன்னம் ஒருதுளியான மூலவிந்து நாதத்தால்,
முழுமையாய் எனதுஉடல் முற்றறிவன் திருவருளால்

3.சூட்சுமமாய்க் குறுகி நின்று தொடங்கியது தன் வளர்ச்சி
சொல்லரிய மறைபொருளாய்த் தொடந்து வரும் வினைக்கேற்ப
ஆட்சியின்றி ஆளுகின்ற ஐயன் திருவருளால்
அன்னை கருப்பை விடுத்து அடைந்துவிட்டேன் மண்ணுலகை
4.எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திரு உள்ளமென்ன?
எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழ்ந்து வரும் மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனைப் பேர்?

5.பெண்ணினத்தை அவமதித்துப் பெருமைபெற நினைந்தவர்கள்
பெரும்பாவச் சுமையேற்றுப் பெற்ற துன்பம் உலகறியும்
எண்ணி, எண்ணிப் பெண் பெருமை ஏற்றிப் புகழ்ந்தே எழுதி
இன்பமுற்றார் இவ்வுலகில் இறைவனைப்போல் என்றுமுன்னார்.

6. உயிர்கள்தமை வெளியிட்டு, உயிர்க்குயிராய் உள்நிறைந்து,
உணர்வாயும் அறிவாயும் உலகில் பல்லுயிர் வாழப்
பயிர்வகைகளாய் நிறைந்து பரங்கருணை யானுணர்ந்தேன்.
பல்லுயிரும்இன்பமுறப் பலவளங்களாய் நிறைந்தான்!

7.நல்லஉயர் சிந்தனைக்கும், ஞானம் பெற ஐயுணர்வை
வெல்லவும் நல் ஆறறிவாய் வித்தை உடல் தந்த இறை,
இல்லையா? உண்டா? என்று எழுகின்ற வாதங்களில்,
இழை துணியில் பாவாய் நூலாய் இருப்பதுபோல் பின்னியுள்ளான்.

8.எங்கெங்கும். என்னுள்ளும், எல்லாத் தோற்றங் களிலும்,
இடையற்ற மறைபொருளாய் இருந்து, பேரண்ட மெங்கும்
தங்கித் தழைத்தே இயங்கும் தற்பரத்தை யானுணர்ந்தேன்,
தனித்து மனத்துள் நிலைத்துத் தவமாற்றும் சாதனையால்.

10.என்னுள் அவனை வைத்தேன். ஏற்றிவந்தேன். போற்றி வந்தேன்.
என்னையவனுள் இணைத்தான் இறைவனாகிப் பாடுகின்றேன்!
உன்னுள்ளும் இவ்வுண்மை உணர்ந்து கடைத்தேர்வதற்கு,
உலகமக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்துப் பாடுகின்றேன்!

11.உலகப்பொருள் உடலுக்கும், உண்மைப் பொருள் உயிருக்கும்,
உயர்கலைகள் அறிவிற்கும், ஒழுக்கநெறி வாழ்வதற்கும்,
நலமளித்தல் நானுணர்ந்தேன், நடுநின்று வாழுகின்றேன்!
நாடனைத்தும் ஊடுருவி, நல்லறிவின் தொண்டாற்றி,

12.வையமெல்லாம் வாழட்டும் வாழ்க்கைவளம் காத்தினிதாய்!
வளரட்டும் மெய்யறிவு வாழ்க்கை இன்பம் துய்தலிலே!
உய்ய மெய்பிபொருள் நாட்டம், உலகெங்கும் மக்களிடம்
ஓங்குக மேலோங்குக நம் உள்ளங்கள் ஒன்றுபட! (ஞா.க.பா.1647.12)

தாயுமானவரது பாடல்களும் வேதாத்திரி மகரசி பாடல்களும் –நமது வாழ்க்கைக்கு நமது ஆன்மீகப் பயணத்திற்கு வழிகாட்டும் படிகற்களாகும். அவர்கள் காட்டிய பாதையில் பயணித்து, ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

துணைநின்ற நூல்கள்.

1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம் ,விஜயா பதிப்பகம், கோவை.
2. தாயுமானசுவாமிகள் வரலாறு, சி. இராமலிங்கம், திருப்பனந்தாள் மடம் திருப்பனந்தாள்.
3. தாயுமானவரும் வள்ளலாரும், பாரதி புத்தகலாயம், சென்னை
4. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், அருள்நிதி மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.
5. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
6. தாயுமானவர், நா. சுப்புரெட்டியார்., அய்யனார் பதிப்பகம், கூடுவாஞ்சேரி.
7. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 அருள்நிதி மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
8. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
9. தாயுமானவரும் வேதாத்திரி மகரிசியும், விஜயா பதிப்பகம், கோவை.
10. தர்மசக்கரம் - மாத இதழ்கள், இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.
11. சுவாமி சித்பவானந்தரின் நூல்கள். இராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை.